1970 மார்ச் 24]

T. MARTIN : I am now on the point. பச்சைக் கொடி காட்டப்பட்டது என்று சொன்னதைப் பற்றி பத்திரிகை நிருபர்கள் முதலமைச்சர் அவர்களிடம் கேட்ட நேரத்தில், 'பச்சைக் கொடி காட்டப்பட்டது ; ஆனால் எஞ்சின் ஓடவில்லை ; எஞ்சினிலே கோளாறு அல்லது ஓட்டுபவர்களிடம் கோளாறு ?' என்று தெரிவித்ததாகவும் பத்திரிகையில் வந்திருக்கிறது. இதைப் பற்றி நாலரைக் கோடித் தமிழ் மக்களும் இந்த மன்றத்தின் மூலமாக அறிய விரும்புவது எல்லாம் சேலம் உருக்காலைத் திட்டத்தை ஏற்றுக் கொண்டார்களா இல்லையா என்பது ஒன்று. இரண்டாவது, சிறப்பு நிதி 175 கோடி ரூபாயில் நம்முடைய அரசின் சார்பாகக் கேட்ட தொகை எவ்வளவு? அவர்கள் கொடுக்க முன்வந்த தொகை எவ்வளவு? அதற்கு அடுத்தபடியாக, பஞ்ச நிவாரண வேலைகளுக்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதில் நம்முடைய மாநிலத்தின் சார்பாகக் கேட்ட தொகை எவ்வளவு? ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்படி இந்த அவையின் நிகழ்ச்சியை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டுமென்று மட்டும் கூற வேண்டுமே தவிர, இவர்கள் கேட்டார்களா, அவர்கள் கொடுத்தார்களா, கொடுத்தது எவ்வளவு என்பதெல்லாம் அடிப்படையிலே தேவையில்லாதது. நான் இதைப் பற்றிச் சுட்டிக் காட்டினால் 'அதிலேதான் இருக்கிறேன்' என்று சொல்கிறீர்கள். நீங்கள் எல்லாம் வக்கீலுக்கு படித்தவர்கள், அதிலேதான் இருப்பீர்கள் என்று பார்த்தால் எங்கேயோ போய்விடுகின்றீர்கள்.

திரு. டி. மார்டின் : இது ஒரு முக்கியமான பிரச்சனை, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை. நாலரைக் கோடி தமிழ் மக்களும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே என்ன பலன் கிட்டப்போகிறது என்பதை உற்று நோக்கிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அமைச்சர் அவர்கள் விரிவாக அங்கு நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூற வேண்டுமானால், மக்கள் மத்தியில் எழுந்துள்ள சந்தேகத்தைப் போக்க வேண்டுமானால் இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிப்பது நல்லது என்று கூறி இந்த அவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டுகிறேன்.

* மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மார்டின் அவர்கள் அவசர முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை இங்கு அளித்து அவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

டில்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நானும், நிதியமைச்சர் அவர்களும் கலந்து கொண்டு அளித்துள்ள கருத்துக்கள் விரிவாகப் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. தமிழ் நாட்டினுடைய தேவைகளை ஒவ்வொரு தேசிய வளர்ச்சிக்

குழுக் கூட்டத்திலும் நாங்கள் வலியுறுத்தத் தவறுவது இல்லை என்பதையும், வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதையும், தேசிய வளர்ச்சிக் குழு கூட்டங்கள் கூடுகிற நேரங்களில் மாத்திரம் அல்லாமல் வேறு நேரங்களிலும் பொறுப்பு வாய்ந்த மத்திய அமைச்சர்களை நேரிலே சந்தித்து வலியுறுத்திக் கேட்டும், கடிதங்கள் மூலமாக வலியுறுத்திக் கேட்டும் தமிழ் நாட்டின் தேவைகளை உணர்த்திக் கொண்டு வருகிறோம். அந்த அடிப்படையில்தான் இப்போது 21, 22 ஆகிய நாட்களில் நடை பெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் பிரதமர் அவர்கள் பேசி முடித்த பிறகு விவாதத்தைத் தொடங்கி வைத்தவன் என்ற முறையில் தமிழ்நாட்டினுடைய தேவைகளை நான் குறிப்பிட்டுக் காட்டினேன். தமிழ்நாட்டின் தேவைகள் எவையெவை, என்னென்ன குறிப்பிட்டுக் காட்டப்பட்டன என்பவைகள் எல்லாம் விளக்கமாக இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் அறியத்தக்க வண்ணம் ஏடுகளிலே வந்திருக்கின்றன. பல ஆண்டு காலமாக நாம் இந்த அவையிலும், மத்திய அமைச்சர்களிடத்திலும் எடுத்துச் சொல்லி வருகிற அந்தக் கோரிக்கைகளைத்தான் மீண்டும் மீண்டும் எழுப்பி வருகிறோம்.

அங்கே நான் என்னுடைய உரையை இறுதியாக முடிக்கிற நேரத்திலே, "சேலம் இரும்பாலையைப் பற்றி இதுவரையில் நீங்கள் பலமுறை வரும், வரும் என்கிற அறிவிப்பைத் தந்தாலும் இந்த வளர்ச்சிக்குழு கூடியிருக்கின்ற இந்தக் கட்டத்திலே கூட அது பற்றி இறுதியான அறிவிப்பைத் தரவில்லை; ஆகவே அந்த அறிவிப்புத் தேவை" என்பதைச் சுட்டிக்காட்டினேன். 175 கோடி ரூபாய் கூடுதல் தொகையாக மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக் கிறது. மார்டின் அவர்கள் கேட்டார்கள்—'அதிலே எவ்வளவு தொகை நமக்கு ஒதுக்கியிருக்கிறார்கள்? என்று. 'நீங்கள் எவ்வளவு கேட்டீர்கள்?' என்றும் கேட்டார்கள். 175 கோடி ரூபாய் கூடுதல் தொகையை ஒன்பது மாநிலங்களுக்கு ஒதுக்கி யிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலம் அதிலே அறவே புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஏதாவது ஒதுக்கினால் தானே, இவ்வளவு ஒதுக்கினார்கள், இவ்வளவு அதிகத் தொகை தேவை என்று சொல்ல முடியும். ஆகவே, அடிப்படைக் குறைகளை ஆராய்ந்து இந்த மாநிலத்திற்கு இவ்வளவு ஒதுக்க வேண்டுமென்று கேட்பதை விட, 175 கோடி ரூபாயில் எதுவும் இல்லையென்று புறக்கணிக்கப்பட்டிருக்கும் நிலையைச் சுட்டிக்காட்டி ஏதாவது ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் ஏற்றுக் கொள் வார்களேயானால், அதற்குப் பிறகு இவ்வளவு தொகையை ஒதுக்க வேண்டுமென்ற வாதத்தில் இறங்குவது பொருத்தமுடையதாக இருக்கும்.

வறட்சிப் பணிகள் என்ற பெயரால் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த இந்த ஆண்டு 25 கோடி ரூபாயும், வருகிற நான்கு ஆண்டுகளுக்கு 100 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதிலே எவ்வளவு ஒதுக்கப்பட்டது, நீங்கள் கேட்டது எவ்வளவு என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதிலும் அவர்கள் நம்முடைய தமிழ் மாநிலத்திற்கு, தமிழ் நாட்டிற்கு எதுவும் ஒதுக்கவில்லை. ஆகவேதான் கடைசி நிபந்தனைகளாக வைத்தோம்—சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கான அறிவிப்புத் தேவை; 175 கோடி ரூபாயில் தமிழகம் வஞ்சிக்கப்படுகிறது, நிவாரணம் தேவை ; 100 கோடி ரூபாயிலும், வேலை வாய்ப்புக்காக ஒதுக்கப்பட்ட பணத்திலும் தமிழகம் ஏமாற்றப்பட்டிருக்கிறது ; அதற்கும் பதில் தேவை. இந்தப் பதில்கள் அளிக்கப்படாத வரையில் நான்கு கோடி தமிழ் மக்களின் சார்பில் இந்தத் திட்டத்திற்கான ஒப்புதலை, சம்மதத்தைத் தரத் தயாராக இல்லை என்று எடுத்து சொன்னேன். மறுநாள் பேசிய நம்முடைய நிதியமைச்சர் அவர்களும் பிரதமர் அவர்கள் உரையில் இதைக் கோடிட்டுக் காட்டுவார்கள் என்று காத்திருந்து, கோடிட்டுக்காட்டாத காரணத்தால் இறுதியாக, முதல்நாள் முதலமைச்சர் எடுத்துச் சொன்ன நிபந்தனைகள் என்னவாயிற்று. அதற்கு என்ன பதில் என்று கேட்டார்கள். அதற்கும் அங்கே பதில் அளிக்கப்படவில்லை. இந்த வகையிலே தமிழகம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குச் சம்மதம் தரவில்லை என்ற காரணத்தால் அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள எதையும் பெற்றுக் கொள்ளப் போவதில்லையென்று அர்த்தமல்ல. நம்முடைய உணர்ச்சிகளைக் காட்டியிருக்கிறோம். நம்முடைய உணர்ச்சியை இந்த வகையில் தேசிய வளர்ச்சிக் கூட்டத்தில் காட்டியிருக்கிறோமே அல்லாமல் திட்டத்தையே ஏற்றுக் கொள்ளப் போவதில்லை, திட்டமே தேவையில்லை என்ற நிலைக்குச் செல்லவில்லை. வருவதை விடுவதாக இல்லை. அதே நேரத்தில் தமிழர்களின் உணர்ச்சியை எடுத்துக் காட்டும் வகையில் நீண்ட நெடும் காலமாக சேலம் உருக்காலைத் திட்டம் வரும் வரும் என்று அறிவிக்கப்பட்டும் இன்னும் வராமல் இருக்க என்ன காரணம், அதைப் பற்றி அறிவித்தாக வேண்டுமென்ற அடிப்படையில்தான் நான், நிதியமைச்சர் இருவரும் பேசுகின்ற நேரத்தில் இந்த விஷயங்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறோமே தவிர வேறு அல்ல.

தேசிய வளர்ச்சிக் கூட்டத்தில் கொடுக்கப்பட்ட அறிவிப்பில் கூட சேலத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. அதிலே—

Advance action for additional steel Capacity in the Fifth Plan. என்று போட்டு அதற்காக 110 கோடி ரூபாய் ரிவைஸ்டு அவுட்லே என்ற அளவில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அடிஷனல் அவுட்லே என்ற அளவில் 90 கோடி ரூபாய் என்று குறிக்கப் பட்டிருக்கிறது. அதே நேரத்தில் என்.எம்.டி.சி. என்பதற்காக கூடர்முக்—இதைக் குதிர்முக், குதிரை மூக்கு என்றெல்லாம் சொல்கிறார்கள்—என்று பெயர் குறிப்பிட்டு 15 கோடி ரூபாயில் பிராஜக்ட் எற்படுத்துவது பற்றிக் குறிப்பிட்ப்

பட்டிருக்கிறது. ஆகவேதான் சேலம் என் குறிப்பிடப்படவில்லை என்பதை அழுத்தந்திருத்தமாகக் கேட்டிருக்கிறோம். அவை தமிழர்களின் உணர்ச்சியைப் பிரதிபலிக்க எடுத்துச் சொல்லப் பட்ட வார்த்தைகள் ஆகும். இந்த உணர்ச்சிக்கு மத்திய அரசு மதிப்பு அளிக்கும் என்று நம்புகிறேன். மதிப்பளித்து ஆவன செய்ய வேண்டும்; செய்வதற்கு முன்வருவார்கள் என்று நம்பு கிறேன். அந்த நம்பிக்கை வீண் போகாது என்று கருதுகிறேன். அந்த நம்பிக்கை நாசமாகுமானால் இந்தச் சட்டமன்றத்தில் இருக்கும் எல்லாக் கட்சிக்காரர்களும் ஒன்று சேர்ந்து அதற்குப் பிறகு என்ன செய்வது என்பதை யோசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த விஷயத்தை இந்த அளவுக்கு நிறுத்திக் கொள்ளுவது நல்லது என்ற அளவில் திரு. மார்டின் அவர்கள் கொண்டு வந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் தேவையில்லை என்ற கருத்தைக் கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்பு தீர்மானங்களுக்குத் தேவை இல்லை என்று கருதுகிற காரணத்தால் நான் அனுமதி தர மறுக்கிறேன்.

### (5) 1970-71-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) நிதிக் கோரிக்கை எண் 9-எ. 1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 9-எ-1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்துசமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 40,83,900-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

**திரு. பி. எஸ். தனுஷ்கோடி :** தலைவர் அவர்களே, கோயில், மடம், தருமஸ்தாபன நிலங்களில் மொத்தக் குத்தகை சாகுபடி செய்யும் இடைத்தரகர்களை நீக்கி நேரடியாக நிலத்தில் உழும் விவசாயிகளுக்கு 5 எக்கர் வீதம் நிலம் கொடுக்கவேண்டுமென்பது பற்றி விவாதிக்க—"நிதிக் கோரிக்கை எண் 9-எ—1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 40,83,900-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழி கிறேன்.